சார்பு நீதிமன்றம், இலால்குடி

முன்னிலை:– திருமதி.R.மோகனா, B.L.,

சார்பு நீதிபதி, இலால்குடி.

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 04 ம் நாள் வெள்ளிக்கிழமை

I.A.No.4/2024 in OS.407/2018

(CNR.No.TNTP180007592017)

S.ராஜசிம்மன் ......மனுதாரர்/வாதி.

//எதிர்//

1. சம்பூர்ணம்
2. சந்த்ரா
3. பூங்கோதை
4. கல்யாணி
5. விஜயசிம்மன்
6. காயத்ரி .....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 10.09.2024 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்பு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.R.வரதராஜன் அவர்கள் முன்னிலையாகியும், 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சண்முகசுந்தரம் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினராகிவிட்ட நிலையிலும் இருதரப்பு வாத உரைகளை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....



R MOHANA Digitally signed by R MOHANA

**உத்தரவு**

மனுவானது மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டு அபிடவிட்டில் கண்ட காரணத்தினால் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக அசல் வழக்கை மீண்டும் மறுதிறப்பு செய்யக்கோரி பிரிவு 151 சிபிசின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரரின் மனு மற்றும் அபிடவிடின் தமிழாக்க சுருக்கம் –

மனுதாரர் அசல் வழக்கின் வாதி. மனுதாரர் பிரதிவாதிகளுக்கு எதிராக பாகபிரிவினை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகள் இந்த அபிடவிட்டின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டியது. அசல் வழக்கு கடந்த 03.01.2024 ஆம் தேதி வாதத்திற்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 25.09.2023 ஆம் தேதியன்று பி.வா.சா.1 ஐ மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு வழக்கு வாதத்திற்காக ஒத்திவைக்கப்பட்டது. பி.வா.சா.1 சாட்சிய த்தை பார்த்தபிறகு தான் சில முக்கியமான கேள்விகள் கேட்காமல் விடுபட்டுவிட்டது பற்றி மனுதாரருக்கு தெரிய வந்தது. ஆகையால் பி.வா.சா.1 ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்வதற்காக தாவா மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். மனு அனுமதிக்கப்படவில்லை என்றால் மனுதாரருக்கு பாதிப்பு ஏற்படும் மற்றும் மனுதாரருக்கு மனுவில் நல்ல வாதம் உள்ளது. ஆகையால் மனு தாக்கல்.

3. 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம் –

மனுதாரர்/வாதி சொல்லியுள்ள சங்கதிகளில் இந்த எதிர்மனுதாரர்/



R MOHANA Digitally signed by R MOHANA

பிரதிவாதி ஒப்பு கொள்ளுகின்ற சங்கதிகளை தவிர மற்றைய சங்கதிகளை மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டும். மேற்படி வழக்கில் வாதி தரப்பில் விசாரணை முடிந்து பிரதிவாதி தரப்பில் விசாரணை முடிந்தது. பி.வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக 06.06.2023, 26.06.2023, 17.07.2023, 26.01.2023, 14.08.2023, 30.08.2023, 19.03.2023, 25.09.2023, 17.10.2023, 28.11.2023 போன்ற அத்தனை தேதிகளிலும் குறுக்கு விசாரணை செய்வதற்கு வாய்தாக்களை வாங்கிவிட்டு பின்னர் குறுக்கு விசாரணை முழுவதுமாக விரிவாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுவிட்டது. பின்னர் 13.12.2023 அன்று வாதுரைக்காக வாய்தா போடப்பட்டது. அன்றைய தேதியில் வாதி குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது எந்த வகையிலும் ஏற்க கூடியதில்லை. காரணம் இந்த வழக்கை முடிவு செய்யாமல் கால தாமதம் செய்ய வேண்டுமென்றும் என்ற கெட்ட எண்ணத்துடன் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் சென்ற 11.07.2023 ஆம் தேதியன்று இந்த வழக்கானது 5 ஆண்டுகளுக்கு மேலானது என்று அன்றைய தினம் கொடுக்காமல் மாலை வேளையில் 26.07.2023 குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டும் அதற்கு பிறகும் குறுக்கு விசாரணைக்கு வாய்தா வாங்கப்பட்டுள்ளது. மேலும் பி.வா.சா.1 யிடம் வழக்கிற்கான முக்கியமான கேள்விகள் கேட்கப்பட்டுவிட்டது தற்போது வாதி வேண்டுமென்றே இந்த இடைக்கால மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வாதுரை செய்யாமல் கால தாமதம் செய்ய வேண்டுமென்று இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டும். ஆகையால் சமூகம் கோர்ட்டார் அவர்கள் மேற்படி மனுவை



R MOHANA Digitally signed by R MOHANA

மேற்கண்ட காரணங்களுக்காக தள்ளுபடி செய்ய வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரர் மற்றும் 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித சாட்சிய சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் அழைத்தும் ஆஜராகாமல் எதிருரை தாக்கல் செய்யாமல் ஒருதலைப்பட்சமாகிவிட்டனர். இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

5. <u>தீர்வு காணவேண்டிய பிரச்சினை</u> –

இந்த இடைக்கால மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?

6. <u>தீர்வு</u> –

மனுதாரர்/வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தில் அசல் வழக்கு பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி இந்த மனுதாரர்/வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் தரப்பில் பி.வா.சா.1 ஐ முழுவதுமாக குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்ட பின்பு வாதத்திற்கான நிலையில் பி.வா.சா.1 சாட்சியத்தை பார்த்தபோது தான் சில முக்கியமான கேள்விகள் விடுபட்டுவிட்டது என்ற விவரம் மனுதாரர்/வாதிக்கு தெரியவந்தது என்றும் அது குறித்து கேள்விகளை பி.வா.சா.1 யிடம் கேட்கவில்லை என்றால் மனுதாரருக்கு அசல் வழக்கில்மிகுந்த இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் அதனால் மனுதாரருக்கு வாய்ப்பு வழங்கி பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய அனுமதியளித்து மனுவினை அனுமதித்து உத்தரவிடவேண்டும் என்று வாதிடப்பட்டது.

7. 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்



R MOHANA Digitally signed by R MOHANA

வாதத்தில், பி.வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக பல தேதிகளில் மனுதாரருக்கு வாய்ப்பு வழங்கி மனுதாரர் தரப்பில் பி.வா.சா.1 குறுக்கு விசாரணை முழுவதுமாக கடந்த 25.09.2023 ஆம் தேதி முடிக்கப்பட்டுள்ளதாகவும் மீண்டும் மனுதாரர் தரப்பில் சில முக்கிய கேள்விகள் விடுபட்டுவிட்டதாக கூறி தாக்கல் செய்துள்ள தற்போதைய மனுவில் எவ்வித தகுந்த வாதமும் இல்லை என்றும் வழக்கு 5 வருட காலத்திற்கு மேலாக நிலுவையில் இருந்து வரும் நிலையில் எவ்வித தகுந்த காரணமும் இல்லாமல் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யத்தக்கது என வாதிடப்பட்டது.

8. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன. அசல் வழக்கு மனுதாரர்/வாதியால் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு இருதரப்பு விசாரணை முடிக்கப்பட்டு வழக்கு வாதத்திற்கான நிலையில் நிலுவையில் இருந்து வருகிறது. 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியமான பி.வா.சா.1 சாட்சி 08.04.2023 ஆம் தேதியன்று விசாரணை ஆரம்பிக்கப்பட்டு 17.04.2023 ஆம் தேதியன்று குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறுவதுபோல் மனுதாரர் தரப்பில் கடந்த 26.07.2023 மற்றும் 13.09.2023, 25.09.2023 ஆகிய தேதிகளில் பி.வா.சா.1 ஐ மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ளது. அதன் பின்பு 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு சாட்சிய விசாரணை 17.10.2023 ஆம் தேதி முடிக்கப்பட்ட பின்பு இருதரப்பு வாதத்திற்கான நிலையில் 03.01.2024 ஆம் தேதி மனுதாரர் தரப்பில் தற்போதைய மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் சில முக்கியமான கேள்விகள்



R MOHANA Digitally signed by R MOHANA

விடுபட்டு போய்விட்டதாக கூறப்பட்டுள்ளது. ஆனால் பி.வா.சா.1 ஐ மீண்டும் மறுதிறப்பு செய்து எது சம்மந்தமான கூடுதல் கேள்விகள் கேட்பதற்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதற்கான தகுந்த காரணத்தினை மனுதாரர் மனுவில் எடுத்துரைக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10**. மனுதாரர்/வாதி வழக்கு சொத்து பூர்வீக சொத்து என்று கூறி அவரது தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாராரின் தகப்பனார் அவரது தாயார் இறந்தபின்பு 4ம் பிரதிவாதியை திருமணம் செய்து கொண்டதன்மூலம் 5, 6 பிரதிவாதிகள் வாரிசுகளாக இருப்பதாக மனுதாரர்/வாதி வழக்குரையில் எடுத்துரைத்துள்ளார். மேற்படி 5ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

**11**. அவர் தரப்பு வாதத்தில் வாதி மற்றும் 5ம் பிரதிவாதியின் தகப்பனாரான ஜெயபாலனுக்கு தாவா சொத்து கிடைக்கப்பெற்று அதனை ஜெயபாலன் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு பி.வா.சா.ஆ.18 உயில் ஆவணம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. அதுகுறித்து வாதி தரப்பில் கடந்த 25.09.2023 ஆம் தேதியன்று குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 சாட்சியத்தை தவிர வேறு எந்த சாட்சியமும் விசாரிக்கப்படவில்லை.

**12**. இருதரப்பு வாதுரைகள் மற்றும் சாட்சியங்களின்படி தாவா சொத்தின் உரிமை குறித்து தீர்வு காண வேண்டியுள்ளது என்றாலும் அதுகுறித்து இருதரப்பிலும் நிரூபணம் செய்திருக்கும் பட்சத்தில் மட்டுமே அதற்கான தீர்வினை பெற முடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. தற்போதைய



R MOHANA Digitally signed by R MOHANA

வழக்கில் பி.வா.சா.1 ஐ மனுதாரர் எது சம்மந்தமாக கேள்விகள் கேட்கப்பட வேண்டியுள்ளது என்பதை பற்றி மனுவில் எடுத்துரைக்காமலும் அதற்கான தகுந்த காரணத்தை எடுத்துரைக்காமலும் தற்போதைய மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் மனுதாரர் மனுவில் தகுந்த வாதம் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து மனுவினை தள்ளுபடி செய்யலாம் இம்மனுவில் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**இறுதியாக,** மனு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று **2024 ம் வருடம் அக்டோபர் மாதம் 04 ம் நாள்** அவையறிய பகரப்பட்டது.

R MOHANA Digitally signed by R MOHANA

சார்பு நீதிபதி,

இலால்குடி.

**<u>சான்றாவணங்களின் பட்டியல்</u>**

<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u> – இல்லை

R MOHANA Digitally signed by R MOHANA

சார்பு நீதிபதி,

இலால்குடி.

Subordinate Court Lalgudi

**IA.No.4/2024 in OS.No.407/2018**

Draft / Fair Order

**Date – 04.10.2024**